தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 27.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 7712/E/2018**

திரு J.ரவி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
திருச்சி - 620 001. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 07.08.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 11.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 15.10.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு J.ரவி ஆஜராகவில்லை. மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்திலிருந்து அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்புக் கடிதமானது 16.09.2019 அன்று சார்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தான் ஆஜராகாதது குறித்து ஆணையத்திற்கு எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை. இதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு எம்.சுகுமாரன், கண்காணிப்பாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், திருச்சி ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 07.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கு தமிழக அரசினால் ஒப்புகை அளிக்கப்பட்ட மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் பணியிடங்களின் பெயர் விபரம், தங்கள் அலுவலகத்திற்கு தமிழக அரசினால் ஒப்புகை அளிக்கப்பட்ட பணியிடங்களில் தற்சமயம் பணிபுரியும் அனைத்து அலுவலர்களின் பெயர், பணியிடத்தின் பெயர், தொலைபேசி எண் போன்ற விபரம், தங்கள் அலுவலகத்தில் காலி பணியிடம் ஏதும் இருப்பின் அவை பற்றிய விபரம், திருச்சி மாவட்டத்தில் உள்ள லால்குடி, முசிறி, ஸ்ரீரங்கம், திருச்சி ஆகிய கோட்டங்களின் நில அளவை ஆய்வாளர், அலுவலக முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண் போன்ற விபரம் என 14 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட நில அளவை அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருச்சி என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 11.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியரகம், திருச்சி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 15.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 06.09.2018 மற்றும் 27.11.2018 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக ஏற்கெனவே தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் 07.01.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்குப் பொது அதிகார அமைப்பின் ஆவணங்களின் அடிப்படையில் உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதென்பது தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கின் மீது மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 7712/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
திருச்சி - 620 001.

**<u>மனுதாரர்</u>**

திரு J.ரவி,
த/பெ. ஜெயராமன்,
எண்.179/G, பெரியார் நகர்,
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம் - 621 010.

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*